# பொதுத்தேர்வு 2023 - மாதிரி வினாத்தாள்

மொத்த மதிப்பெண்கள் : 100

நேரம் :3.00 மணி

## சமூக அறிவியல்

| தேர்வுஎண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|

பகுதி -1

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

1. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார் ? 14 × 1 = 14

   அ) ரூஸ்வெல்ட் ஆ) செம்பெர்லின் இ) உட்ரோ வில்சன் ஈ) பால்டுவின்

2. ஹிட்லர் எவரை மிகவும் கொடுமைப்படுத்தினார் ?

   அ) ரஷ்யர்கள் ஆ) அரேபியர்கள் இ) துருக்கியர்கள் ஈ) யூதர்கள்

3. எந்த ஆண்டு உடன்கட்டை ஏறுதல் சதி ஒழிக்கப்பட்டது ?

   அ) 1827 ஆ) 1829 இ) 1826 ஈ) 1827

4. "சத்யார்த்தபிரகாஷ்" எனும் நூலின் ஆசிரியர் யார் ?

   அ) தயனாந்த சரஸ்வதி ஆ) அயோத்தி தாசர் இ) அன்னி பெசன்ட் ஈ) சாரதா நந்தா

5. கூற்று : குடியரசுத்தலைவர் ரூஸ்வேல்ட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார் .

   காரணம் : அவர் 1941 ஆண்டு கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார் .

   அ) கூற்றும் காரணமும் சரி ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

   இ) காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை ஈ) காரணம் சரி ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை

6. வேலூர் புரட்சிக்குப் பின் திப்பு சுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பபட்டார்கள் ?

   அ) கல்கத்தா ஆ) மும்பை இ) டெல்லி ஈ) மைசூர்

7. உலகின் மிக நீளமான அணை

   அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை இ) ஹிராகுட் அணை ஈ) பக்ரானங்கல் அணை

8. மிக அதிகமாக கிடைக்ககூடிய ஆற்றல் வளம்

   அ) உயிரிய சக்தி ஆ) சூரியன் இ) நிலக்கரி ஈ) எண்ணெய்

9. மாங்கனீசு இவற்றில் பயன்படுத்தப்படுகிறது .

   அ) சேமிப்பு மின்கலங்கள் ஆ) எஃகு தயாரிப்பு இ) செம்பு உருக்குதல் ஈ) பெட்ரோலியம் சுத்திகரிப்பு

10. இந்தியாவில் தங்க நாற்கரச் சாலையின் நீளம் _________________

    அ) 5846 கி.மீ ஆ) 5942 கி.மீ இ) 5630 கி.மீ ஈ) 5800 கி.மீ

11. கீழ்காணும் எந்த ஒன்று ஆளுநரின் அதிகாரம் அல்ல

    அ) சட்டமன்றம் ஆ) நிர்வாகம் இ) நீதித்துறை ஈ) தூதுரகம்

12. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது ?

    அ) இந்தியா மற்றும் சீனா ஆ) இந்தியா மற்றும் நேபால் இ) இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா ஈ) இந்தியா மற்றும் பர்மா

13. உலக வர்த்தக அமைப்பின் ( WTO ) தலைவர் யார் ?

அ) அமைச்சரவை ஆ) தலைமை இயக்குனர் இ) துணை தலைமை இயக்குனர் ஈ) இவற்றில் எதுவும் இல்லை

14. இந்தியாவில் தோன்றிய உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.

அ) நீலப்புரட்சி ஆ) வெள்ளைப்புரட்சி இ) பசுமைப்புரட்சி ஈ) சாம்பல் புரட்சி

## பகுதி – II

எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் .26 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்

15. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி  $10 \times 2 = 20$
16. முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?
17. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூக தீமைகள் யாவை?
18. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?
19. களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?
20. மண் – வரையறு.
21. இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக.
22. வளத்தை வரையறுத்து அதன் வகைகளை குறிப்பிடுக.
23. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.
24. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் என்ன?
25. வெளியுறவு கொள்கை என்றால் என்ன?
26. பஞ்சசீல கொள்கைகளில் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக.
27. அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள் யாவர்?
28. உலகமயமாக்கல் என்றால் என்ன?
29. தமிழ்நாட்டில் உள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.

## பகுதி – III

எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 37 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

30. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.  $10 \times 5 = 50$
31. கோடிட்ட இடங்களை நிரப்புக
    - I. 1940 இல் ராஜினாமா செய்த பிரிட்டன் பிரதமர் ________________ அவார்.
    - II. ஒரு பைசா தமிழன் பத்திரிக்கையைத் துவக்கியவர் __________________________ ஆவார்.
    - III. கட்டபொம்மன் ____ _______ என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.
    - IV. பாளையக்காரர் முறையை தமிழகத்தில் __________ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
    - V. இராணுவ நீக்கம் செய்யப்பட்ட _____________________ பகுதியை ஹிட்லர் தாக்கினார்.
32. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
33. இந்திய சமூகத்தின் புத்தெழுச்சிக்கு ராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகனந்தரும் ஆற்றிய தொண்டினை விளக்குக.
34. வேலூரில் 1806 இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.

35. பல்நோக்கு திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு பல்நோக்கு திட்டங்களை பற்றி எழுதுக.

36. நகரமயமாக்கல் என்றால் என்ன? அதன் சிக்கல்களை விளக்குக.

37. இந்திய மண் வகைகளிக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.

38. வேறுபடுத்துக மற்றும் காரணம் கூறுக

அ) வெள்ளப்பெருக்கு கால்வாய் மற்றும் வற்றாத கால்வாய்

ஆ) புதுப்பிக்க இயலும் வளங்கள் மற்றும் புதுப்பிக்க இயலாத வளங்கள்

இ) வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.

39. ஆளுநரின் சட்டமன்ற அதிகாரங்களை விவரி.

40. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள் யாவை?

41. பசுமைப்புரட்சி ஏன் தோன்றியது என்பதை பற்றி விளக்குக.

42. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.

43. 1920 முதல் 1945 வரையிலான உலக வரலாற்றில் இருந்து ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைக

44. கீழ்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்

அ) ஹவாய் தீவு ஆ) சான் பிரான்சிஸ்கோ இ) ஹிரோஷிமா ஈ) இத்தாலி உ) இங்கிலாந்து

## பகுதி - IV

45. கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி விளக்குக. 2 8 =16

(அல்லது)

சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா-சே- துங்கின் பங்களிப்பை அளவிடுக.

46. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்

1. மசூலிபட்டினம் 2. வண்டல் மண் 3. காவிரி டெல்டா 4. காபி விளையும் இடம்
5. மும்பை 6 பெட்ரோலியம் கிடைக்கும் பகுதி
7. இந்தியாவின் அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம் 8. வடக்கு இரயில்வே மண்லம்

(அல்லது)

1. பாரதீப் துறைமுகம் 2. NH – 4 3. கோதாவரி டெல்டா 4. இந்தியாவின் பன்னாட்டு விமானநிலையம் ஒன்று குறிக்கவும் 5. இரும்பு எஃகு தொழிலகம் ஒன்று 6. கரிசல் மண்
7. தாமோதர் அணை 8.. கொச்சின்

